## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மதிப்பூதியமாக ஊதிய மானியம் உயர்த்தி வழங்குவது – 2010 – 2011 நிதியாண்டிற்கான தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணைகள் –வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத்(1)1 துறை,**

அரசாணை(நிலை) எண்.48 நாள்.16.07.2010

ஆனி 32 திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது.

1.அரசாணை (நிலை) எண்.213, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்.14.11.2007
2.அரசாணை (நிலை) எண்.28 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்.04.02.2010.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.3672/ஊம2(1)/10 நாள் 17.05.2010.

--------

**ஆணை:-**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் வழங்க ஒரு தொண்டு நிறுவனத்திற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் 194 சிறப்புப் பள்ளிகளுக்கு ஊதிய மானியமாக ரூ.1.94 கோடி அனுமதித்து ஆணையிடப்பட்டது.

2. கடந்த 13.05.2010 அன்று, சட்ட மன்றப் பேரவையில், 2010–11 ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் துறையின் மானியக் கோரிக்கையின்போது அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிற்றுவிக்கும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்கள் அனைவரையும் தொடர்ந்து ஊக்கப்படுத்தும் வகையில் தற்போது அரசு அவர்களுக்கு வழங்கி வரும் மாதாந்திர மதிப்பூதியத் தொகையை ரூ.3,000/– லிருந்து ரூ.5,000/–ஆக இந்த ஆண்டு 2010–11 முதல் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

3. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவை அரசுக்கு சமர்பித்துள்ளார். அதன்படி, 2010–11 ம் நிதியாண்டில், தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் இரண்டு சிறப்பாசிரியர்கள் மற்றும் ஒரு தசைப் பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு மதிப்பூதியமாக ரூ.5000/– வீதம் 12 மாதங்களுக்கு வழங்க, கீழ்க்காணும் வகையில் நிர்ணயம் செய்து மனவளர்ச்சி குன்றியோருக்கான ஒரு சிறப்புப் பள்ளிக்கு ரூ.1,80,000/– வீதம் 200 சிறப்புப் பள்ளிகளுக்கு வழங்கும் விதமாக கீழ்கண்டவாறு மொத்தம் ரூ.3.60 கோடி (ரூபாய் மூன்று கோடியே அறுபது இலட்சம் மட்டும்) அனுமதித்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்:-

**<u>1) சிறப்பு ஆசிரியர்கள்</u>**

மாதம் ரூ.**5000/–** x **2** சிறப்பு ஆசிரியர்கள் = **ரூ.10,000/–**

**<u>2) தசைப் பயிற்சியாளர்</u>**

மாதம் ரூ.**5000/–** x **1** பயிற்சியாளர் = **ரூ.5000/–**

––––––––––––

**ரூ.15,000/–**

––––––––––––

ரூ.**15,000/–** வீதம் **12** மாதங்களுக்கு =ரூ.**1,80,000/–**

**200** சிறப்பு பள்ளிகளுக்கு தேவையான தொகை: ரூ.**1,80,000**x200

ரூ. = 3,60,00,000/-

**4.** மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த பின்னர் அதனை ஏற்று மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புபள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மதிப்பூதியத்தினை ரூ.**3000/–** இருந்து ரூ.**5000/–** (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தியும், **2010–11**ம் ஆண்டுக்கு திட்டத் தொடராணை வழங்கியும் இதற்கான செலவினத்திற்கு ரூ.**3.60** கோடி (ரூபாய் மூன்று கோடியே அறுபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**5.** இந்த மானியம், மேற்சொல்லப்பட்ட சிறப்புப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு இரண்டு சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் ஒரு தசைப் பயிற்சியாளர் என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். தன்னார்வு தொண்டு நிறுவனங்கள், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துள்ளன என்பதை உறுதி செய்துகொண்ட பின்னரே மானியத் தொகையை வழங்க, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** மேலே பத்தி **4**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ், பற்று வைக்கப்பட்ட வேண்டும்:-

" 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 சமூக நலன் - 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநில திட்டம் - M.G. – மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான அரசு புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி–**09**–உதவித் தொகை **01** நடப்புச் செலவுக்கான உதவித் தொகை. (து.தொ.கு. 2235-02-101-MG-0914).

7. மேலே பத்தி **4–**ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம் ரூ.**1.44** கோடி ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர் நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொது–I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 39006 /நிதி (சந)/10, நாள் 15.07.2010–ன்படி அத்துறையின் இசைவுடனும், கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.504 (ஐநூற்று நான்கு)ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு.ஜவஹர்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை -35.
மாநில கணக்காயர், சென்னை -18.

<u>நகல்:</u>
முதலமைச்சரின் செயலர் (திரு.எஸ்.கே.பி) சென்னை–9
நிதி (சமூகநலம் / வ.செ.பொது.II) துறை, சென்னை -9.
உறுப்பினர் - செயலர், மாற்றுத் திறனாளிகள் நல வாரியம்,
சென்னை -6.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - பிரிவு 2
இ. கோ. / உ. ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.